முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.

**முன்னிலை : திரு.வி.பத்மநாபன், M.A., M.L., D.H.,**

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.**

2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

**குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள்.**

**55/2019 மற்றும் 01/2019.**

(CNR No.TNDG01-003095-2019) and (CNR No. TNDG01-000020-2019)

குற்றவியல் மேல்முறையீடு 55/2019 –

| | | |
|---|---|---|
| குற்றவியல் மேல்முறையீடுகள் எந்த நீதிமன்றத்திலிருந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திண்டுக்கல். |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண். | | D.V.O.P.No.19/2016. |
| குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். | | Crl.A.No.55/2019 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் | | கலாராணி (39/2019) க.பெ. ஜீவஅசோக் என்ற ஜோசப் ரெட்சகநாதன், கதவு எண்.3/263 A, மகாலட்சுமி நகர், NGO காலனி, திண்டுக்கல். |
| எதிர்மேல்முறையீட்டாளர்களின் பெயர்கள். | | 1.ஜீவ அசோக் என்ற ஜோசப் ரெட்சகநாதன் (41/19) த.பெ. செல்வம் என்ற செபஸ்தியான், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>2.சிரில்ராஜ் (38/19) த.பெ. செல்வம் என்ற செபஸ்தியான், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>3. ஜான்சி (35/19) க.பெ.சிரில்ராஜ், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>4.சேசம்மாள் (55/19) க.பெ.செல்வராஜ், YMR பட்டி, திண்டுக்கல். |

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:11:34 +0530

| | | |
|---|---|---|
| | | 5.செல்வராஜ் (57/19) த.பெ. அருளானந்தம், YMR பட்டி, திண்டுக்கல்.<br><br>6.ஜெயந்தி (44/19) க.பெ.ராஜா, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>7. ராஜா ( 46/19) த.பெ. ராஜீ, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>8.அடைக்கலமேரி (இறப்பு)<br><br>9. செல்வம் என்ற செபஸ்தியான் (65/19) த.பெ. அந்தோணி, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல். |
| உத்தரவு நாள் | | 28.11.2018. |
| விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு | | 1. 1ம் எதிர்மனுதாரர் குழந்தை லஷ்யாடோனியின் கல்வி கட்டண தொகைகளை பருவம் தவறாமல் சம்பந்தப்–பட்ட கல்வி நிறுவனத்தில் செலுத்த வேண்டுமென ஆணையிடப்படுகிறது.<br><br>2. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சீதனப் பொருட்களை உரிய சட்ட நடைமுறைகளை பயன்படுத்தி சம்பந்தப்–பட்ட பாதுகாப்பு அலுவலர் முன்னிலையில் மேற்படி சீதனப் பொருட்களை மனுதாரருக்கு கொடுக்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.<br><br>3. தோட்டனூத்து கிராமம், சர்வே எண்.725/4 மற்றும் 5ல் அமைந்துள்ள மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள மாடி வீட்டில் மனுதாரரும் அவரது குழந்தையும் குடியிருந்து வருவதை எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என பாதுகாப்பு கட்டளைக்கு ஆணையிடப்படுகிறது.<br><br>4. எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செய்த குடும்ப வன்முறைகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூ.2 லட்சத்தினை இவ்வுத்தரவு |

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:11:43 +0530

| | | |
|---|---|---|
| | | தேதியிலிருந்து 1 மாத கால கெடுவிற்குள் வழங்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது. |
| இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்–பட்டதா? அல்லது விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மாற்றியமைக்கப்பட்டதா? அல்லது ஊர்ஜிதம் செய்யப்–பட்டதா ? | | **இறுதியில்,** இக்குற்றவியல்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, D.V.O.P.No.19 of 2016 மனுவில் கடந்த 28.11.2018 தேதியிட்டு வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணை உறுதிசெய்யப்பட்–டுள்ளது. செலவுத்தொகை இல்லை. |

குற்றவியல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதி : 23.01.2019

1. குற்றவியல் மேல்முறையீடு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 10.07.2019.
2. கடைசி விசாரணை: 13.08.2026.
3. தீர்ப்பு: 28.08.2026

**<u>குற்றவியல் மேல்முறையீட்டு எண்–01/2019</u> :**

| | | |
|---|---|---|
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண். | | D.V.O.P.No.19/2016. |
| குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். | | குற்றவியல் மேல்முறையீடு எண்–01/2019 |
| மேல்முறையீட்டாளர்களின் பெயர்கள் | | 1.ஜீவ அசோக் என்ற ஜோசப் ரெட்சகநாதன் (41/19) த.பெ. செல்வம் என்ற செபஸ்தியான், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>2.சிரில்ராஜ் (38/19) த.பெ. செல்வம் என்ற செபஸ்தியான், மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>3. ஜான்சி (35/19) க.பெ.சிரில்ராஜ், |

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:11:53 +0530

| | | |
|---|---|---|
| | | மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>4.சேசம்மாள் (55/19) க.பெ.செல்வராஜ், YMR பட்டி, திண்டுக்கல்.<br><br>5.செல்வராஜ் (57/19) த.பெ. அருளானந்தம், YMR பட்டி, திண்டுக்கல்.<br><br>6.ஜெயந்தி (44/19) க.பெ.ராஜா, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>7. ராஜா ( 46/19) த.பெ. ராஜீ, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்.<br><br>8.அடைக்கலமேரி (இறப்பு)<br><br>9. செல்வம் என்ற செபஸ்தியான் (65/19) த.பெ. அந்தோணி, மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல். |
| எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர். | | கலாராணி (39/2019) க.பெ. ஜீவஅசோக் என்ற ஜோசப் ரெட்சகநாதன், கதவு எண்.3/263 A, மகாலட்சுமி நகர், NGO காலனி, திண்டுக்கல். |
| உத்தரவு நாள் | | 28.11.2018. |
| விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு | | 1. 1ம் எதிர்மனுதாரர் குழந்தை லஷ்யாடோனியின் கல்வி கட்டண தொகைகளை பருவம் தவறாமல் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தில் செலுத்த வேண்டுமென ஆணையிடப்படுகிறது.<br><br>2. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சீதனப் பொருட்களை உரிய சட்ட நடைமுறைகளை பயன்படுத்தி சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அலுவலர் முன்னிலையில் மேற்படி சீதனப் பொருட்களை மனுதாரருக்கு கொடுக்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.<br><br>3. தோட்டனூத்து கிராமம், சர்வே எண்.725/4 மற்றும் 5ல் அமைந்துள்ள மனுதாரர் மற்றும் 1ம் |

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:12:03 +0530

| | | |
|---|---|---|
| | | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள மாடி வீட்டில் மனுதாரரும் அவரது குழந்தையும் குடியிருந்து வருவதை எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என பாதுகாப்பு கட்டளைக்கு ஆணையிடப்படுகிறது.<br>4. எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செய்த குடும்ப வன்முறைகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூ.2 லட்சத்தினை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 1 மாத கால கெடுவிற்குள் வழங்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது. |
| இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டதா? அல்லது விசாரணை நீதிமன்றத்தின் உத்ரதரவு மாற்றியமைக்கப்–பட்டதா? அல்லது ஊர்ஜிதம் செய்யப்பட்டதா ? | | இம்மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2 முதல் 7 மற்றும் 9 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விசாரணை நீதிமன்றம், D.V.O.P.No.19 of 2016 மனுவில் கடந்த 28.11.2018 தேதியிட்டு வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணையானது இழப்பீட்டு பரிகாரத்தை பொறுத்து மட்டும் மாற்றி அமைக்கப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் மட்டும் மனுதாரருக்கு ரூ.2,00,000/– இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்று தீர்மானித்து, இதர பரிகாரங்களைப் பொறுத்து விசாரணை நீதிமன்ற உத்தரவு மற்றும் உத்தரவாணையை உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவுத்தொகை இல்லை. |

1. குற்றவியல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதி : 21.12.2018.
2. குற்றவியல் மேல்முறையீடு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 02.01.2019.
3. கடைசி விசாரணை: 13.08.2026.
4. தீர்ப்பு தேதி : 28.08.2026

இந்த இரு குற்றவியல் மேல்முறையீடுகளும் என் முன்பாக கடந்த 13.08.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, குற்றவியல்

PADMANABAN VENKATASAMY Digitally signed by PADMANABAN VENKATASAMY Date: 2026.08.28 17:12:12 +0530

மேல்முறையீட்டு வழக்கு எண். 55/2019 வழக்கின் மேல்முறையீட்டாளர் மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண்.01/2019 வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.போதுமணி அவர்கள் முன்னிலையாகியும், குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 55/2019 வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மற்றும் குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.01/2019 வழக்கின் மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.ரெக்சின்ராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இந்த இரண்டு மேல்முறையீட்டு வழக்குகளின் 8வது எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் 8வது மேல்முறையீட்டாளரான அடைக்கலமேரி என்பவர் மேல்முறையீட்டு வழக்கு நிலுவையிலிருந்த சமயத்தில் இறந்து விட்ட நிலையில், இந்த இரண்டு குற்றவியல் மேல்முறையீட்டு வழக்குகளிலும் இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த இரண்டு மேல்முறையீடு–களிலும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்:

## பொதுவான தீர்ப்புரை

**1)** குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 29–ன் கீழ் திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 D.V.O.P.No.19/2016 வழக்கில் வழங்கிய உத்தரவினை மாற்றம் செய்து மேல்முறையீட்டாளர்/மனுதாரருக்கும், மைனர் மகள் லஷ்யாடோனிக்கும் இழப்பீடு தொகையினை அதிகப்படுத்தியும், இந்த மேல்முறையீட்டில் கோரியுள்ளபடி உத்தரவு பிறப்பிக்கக்கோரி **குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.55/2019** தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 29–ன் கீழ் திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 D.V.O.P.No.19/2016 வழக்கில் 28.11.2018ம் தேதியன்று வழங்கிய உத்தரவினை

PADMANABAN VENKATASAMY Digitally signed by PADMANABAN VENKATASAMY Date: 2026.08.28 17:12:21 +0530

ரத்து செய்யக்கோரி குற்றவியல் **மேல்முறையீடு வழக்கு எண்.01/2019** தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள D.V.O.P.No.19/2016 மனுவின் சுருக்கம்:**

கடந்த 08.02.2004ம் தேதியன்று மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இந்து முறைப்படி ஜம்புலியம்பட்டி நாகம்மாள் கோவிலில் திருமணம் நடைபெற்றது. அதன் பின்பு அரசு சலுகை பெறுவதற்காகவே கடந்த 26.04.2004ம் தேதியன்று திண்டுக்கல் நகர் வடக்கு ராஜக்காபட்டியில் உள்ள காளியம்மன் திருக்கோவிலில் ஜீவ அசோக்கின் பெற்றோர் மற்றும் நண்பர்கள் முன்பாக இந்துமத திருமண முறைப்படி மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் திருமணம் செய்து மேற்படி திருமணம் 27.07.2007ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டு இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்ததில் இருவருக்கும் லஷ்யாடோனி என்ற பெண்குழந்தை பிறந்துள்ளது. அதன் பின்பு மனுதாரரின் பெற்றோர் சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும் சுமார் 15 பவுன் தங்க நகைகளை வரதட்சணையாக அளித்தனர். திருமணத்திற்கு பின்பு மனுதாரரின் கணவரின் சகோதரர்கள் 1ம் மனுதாரரையும், அவரது மகளையும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறச் சொல்லி கடந்த 24.06.2006ம் தேதியன்று மதமாற்றம் செய்துள்ளனர். 1ம் மனுதாரருக்கு அவரது பெற்றோர் சீதனமாக அளித்த 15 பவுன் தங்க நகைகளை அடகு வைத்து ஊதாரித்தனமாக செலவு செய்து விட்டார். இதனை கேட்டதற்கு 1ம் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரரை கையால் தாக்கியும், தகாத வார்த்தையால் பேசியும் இழிவுபடுத்தியும் வந்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் ஒரு ஆசிரியையுடன் பழகி வந்ததால் மனுதாரர் 28.06.2008ம் தேதியன்று திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் பின்பு 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரை தகாத வார்த்தைகள் பேசியும் பொது இடத்தில் அடித்து சித்திரவதை செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரிடம் வரதட்சணையாக ரூ.50,000/– மற்றும் 10 பவுன் தங்க நகையும் கேட்டு அடிக்கடி கொடுமைப்படுத்தி வந்துள்ளார்.

PADMANABAN VENKATASAMY Digitally signed by PADMANABAN VENKATASAMY Date: 2026.08.28 17:12:29 +0530

1ம் எதிர்மனுதாரருக்கு 1ம் மனுதாரரின் பெற்றோர் வரதட்சணை கொடுக்க இயலாததால், 1ம் மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு விரட்டியுள்ளார். அது குறித்து இந்த மனுதாரர் திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சி.சி.எண்.173/2009 வழக்கு திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மனுதாரர் அவரது பெயரிலும் அவரது கணவர் பெயரிலும் வீடு கட்ட தனியார் நிறுவனத்தில் கடன் பெற்று கட்டிய வீட்டிற்கு சென்று வாழ்ந்தபோது, 1ம் எதிர்மனுதாரர் மேற்படி வீட்டின் மின் இணைப்பை துண்டித்துவிட்டார். 1ம் எதிர்மனுதாரர் மற்ற 4 நபர்களுடன் வந்து மனுதாரரையும் அவரது மகளையும் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் விரட்டியதால், அது குறித்து, இந்த மனுதாரர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சி.சி.எண்.85/2009 என்ற வழக்கு திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் நிலுவையிலிருந்து வருகின்றது. இந்நிலையில் 1ம் மனுதாரரின் கணவரான 1ம் எதிர்மனுதாரர் திண்டுக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி HMOP No.236/2008 வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் மனுதாரரின் கணவர் மனுதாரரை வீட்டில் பங்கு கேட்க கூடாது மற்றும் உள்ளே வரக்கூடாது என உத்தரவிடக்கோரி திண்டுக்கல் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.612/2008 வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தனக்கும் தனது மகளுக்கும் வாழ்க்கை பராமரிப்பு கோரி திண்டுக்கல் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்ச மனு தாக்கல் செய்து அம்மனு MC No.63/2008 ஆக நிலுவையில் உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் குரும்பபட்டி அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கபள்ளியில் ஆசிரியராக வேலை செய்வதன் மூலம் மாதம் ரூ.20,000/- வருமானம் பெற்று வருகின்றார். மேலும் ரூ.5 லட்சம் வரை வட்டிக்கு விட்டு வருகிறார். எனவே எதிர்மனுதாரர்களால் வழக்கு நடவடிக்கைக்கு மனுதாரருக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டியும், வாழ்க்கை பராமரிப்பு தொகையாக மாதம் தோறும் ரூ.15,000/- வழங்க

PADMANABAN VENKATASAMY Digitally signed by PADMANABAN VENKATASAMY Date: 2026.08.28 17:12:38 +0530

வேண்டியும், தனது மகளின் பள்ளி கட்டணத்தை செலுத்த உத்தரவிடக்கோரியும், தனது சீதனப்பொருட்களை தன் வசம் ஒப்படைக்க வேண்டுமென உத்தர– விடக்கோரியும், குடியிருக்கும் வீட்டுக்கு வாடகை பணம் தரக்கோரியும், தன்னை பற்றி பொய்யான அவதூறு பரப்புவதற்கு தடை பிறப்பிக்கக்கோரியும், கட்டாய மதமாற்றத்தால் மனஉளைச்சலானதற்கு இழப்பீடு தர உத்தரவிடக்கோரியும், அரசு உதவி தொகை பெறுவதற்காக பெயர் மாற்றம் செய்ததன் மூலம் தன்னை வருத்தப்பட செய்ததற்கு இழப்பீடு வழங்கக் கோரியும், தன்னை வீட்டை விட்டு அடித்து துரத்தியதால் ஏற்பட்ட உடல்தீங்கு மற்றும் உள்ளத் தீங்கிற்கு இழப்பீடு கோரியும், 6வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி பெற்ற நிலுவைத்தொகை ரூ.80,000/– மேலும் பெறவுள்ள நிலுவைத்தொகையிலும் மனுதாரருக்கும், மனுதாரரின் மகளுக்கும் தர உத்தரவிடக்கோரியும், தனது மகளை 2.1/2 வயதில் 6 வயது என்று குறிப்பிட்டு பள்ளியில் சேர்த்த வன்முறைக்கு இழப்பீடு தரக்கோரியும், தனது கணவர் தன்னை திட்டி தன்னுடன் 2 வருட காலம் வாழாமல் நிம்மதியில்லாமல் வீண் அலைகழிப்பு, அலைச்சல், மன உளைச்சல், எதிர்கால பயத்தை ஏற்படுத்திய செயல்களுக்கும், வரதட்சணை கொடுமை செய்த செயல்களுக்கும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் பொறுப்பாவார்கள் என்ற முறையில் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்– கோரியும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 18, 19, 20, 21 போன்ற கட்டளைகளை வழங்க உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளை மறுத்து எதிருரை எதுவும் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

**5)** இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வாதுரைகளை கேட்டறிந்த விசாரணை நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு உத்தரவு வழங்கியுள்ளது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:12:46 +0530

1. 1ம் எதிர்மனுதாரர், குழந்தை லஷ்யாடோனியின் கல்வி கட்டண தொகைகளை பருவம் தவறாமல் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தில் செலுத்த வேண்டுமெனவும்,

2. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சீதனப் பொருட்களை உரிய சட்ட நடைமுறைகளை பயன்படுத்தி சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அலுவலர் முன்னிலையில் மேற்படி சீதனப் பொருட்களை மனுதாரருக்கு கொடுக்க வேண்டுமெனவும்,

3.தோட்டனூத்து கிராமம், சர்வே எண்.725/4 மற்றும் 5ல் அமைந்துள்ள மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள மாடி வீட்டில் மனுதாரரும் அவரது குழந்தையும் குடியிருந்து வருவதை எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என பாதுகாப்பு கட்டளைக்கு ஆணையிட்டும்,

4. எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செய்த குடும்ப வன்முறைகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூ.2 லட்சத்தினை இவ்வுத்தரவு தேதியிலிருந்து 1 மாத கால கெடுவிற்குள் வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

**6)** திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 கடந்த 28.11.2018ம் தேதியன்று வழங்கிய உத்தரவில் கண்ட இழப்பீடு தொகையை அதிகப்படுத்தக் கோரி குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.55/2019 மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் மேற்கண்ட உத்தரவினை ரத்து செய்யக்கோரி 1 முதல் 9 எதிர்மனுதாரர்களால் குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.01/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7) குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.55/2019 மேல்முறை–யீட்டிற்கான காரணங்கள்**

1. விசாரணை நீதிமன்றம் குடும்ப வன்முறை நிகழ்வு அறிவிப்பில் கண்டுள்ளபடி 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் செய்கை , மனுதாரர் மற்றும் அவரது குழந்தைக்கு

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:12:55 +0530

எதிராக இழைககப்பட்ட வன்முறைகளுக்கு ரூ.2,00,000/- இழப்பீடாக மிக குறைந்த தொகையாக வழங்கி உத்தரவிட்டுள்ளதை மாற்றி ரூ.10,00,000/- ஆக உயர்த்தி வழங்கி உத்தரவிட வேண்டும்.

2, விசாரணை நீதிமன்றம் எதிர்மனுதாரர்களால் ஏற்பட்ட இந்த வழக்கு நடவடிக்கைக்கு மனுதாரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு தனியாக எந்த இழப்பீடும் வழங்கவில்லை.

3. விசாரணை நீதிமன்றம் எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கட்டாய மதமாற்றத்தால் மன உளைச்சலுக்கு ஆளாக்கியதற்கு இழப்பீடு எதுவும் வழங்க உத்தரவிடவில்லை.

4. 1ம் எதிர்மனுதாரர் அரசு ஆசிரியராக பணி செய்வதன் மூலம் மாதம் ரூ.67,085/-க்கும் மேல் ஊதியம் பெற்று அவரது வருவாயை கொண்டு அவரது தாயார் பெயரில் உள்ள இடத்தில் 4 வீடுகள் கட்டி, 2 வீடுகளை வாடகைக்கு விட்டு அதன் மூலம் வருமானம் ஈட்டி வருவதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறி விட்டது.

5. 15 வருடங்களாக பாதிக்கப்பட்ட மனுதாரர் மற்றும் அவரது குழந்தையான சிறுமி லஷ்யாடோனிக்கு எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து ரூ.10,00,000/- இழப்பீடு தொகை வழங்க உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது.

6. 1ம் எதிர்மனுதாரர் தனது வருமானத்தை கொண்டு திண்டுக்கல் டவுன் , 8வது வார்டு, மேற்கு மரியநாதபுரம், பழைய சர்வே எண்.830/1எ, புது சர்வே எண்.17 மாடி வீடு கட்டியுள்ள சொத்தில் முதல் தளத்தில் மனுதாரரும் அவரது குழந்தையும் வசித்து வர பிரிவு 19-ன் கீழான உடைவிட உத்தரவு மாற்றி வழங்க வேண்டும்.

7. 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கடந்த 2008ம் வருடத்திலிருந்து நாளது தேதி வரையிலும் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவிடாமல் செய்து வரும் தொடர் வன்முறை நிகழ்வுகளுக்கு ரூ.10,00,000/- இழப்பீடு சேர்த்து மனுதாரருக்கு வழங்க வேண்டும்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:13:04 +0530

8. 1ம் எதிர்மனுதாரர் கடந்த 11 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் வீண் அலைக்கழிப்பு செய்து நிம்மதியின்மை, அலைச்சல், மன உளைச்சல், அவதூறு செய்து, எதிர்கால பயத்தை ஏற்படுத்தி, வாழ்கையை வீணடித்தது ஆகிய அனைத்து செயல்களுக்கும் மேற்படி குடும்ப வன்முறைகளை செய்தமைக்கு இழப்பீடு ரூ.10,00,000/- வழங்கி உத்தரவிட வேண்டும்.

9. மனுதாரரையும், மைனர் மகளையும் வீட்டை விட்டு எதிர்மனுதாரர்கள் துரத்தியும், வீட்டின் கடன் தவணை தொகையை கட்டாமல் வீடு ஜப்திக்கு விட்டதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டும் நகை பாத்திரங்கள் வழங்காமல் காலம் கடத்திய செயலுக்கும், விவாகரத்து மற்றும் ஜீவனாம்ச வழக்கில் மோசடியாக செயல்பட்டும், அவதூறு குற்றச்சாட்டு செய்ததற்கும் மனுதாரருக்கு மன உளைச்சல் உள்ளதீங்கு, எதிர்கால பயத்தை ஏற்படுத்திய செயல்களுக்கும் உடல் மற்றும் உள்ள தீங்கு தூண்டுதல் செய்ததற்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது.

10. மேல்முறையீட்டாளர்/மனுதாாரர் இந்த மேல்முறையீட்டில் கோரியுள்ளபடி மேல்முறையீட்டு எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் இந்த மேல்முறை-யீட்டாளருக்கு இழப்பீடுகள் வழங்க உத்தரவிட வேண்டும்.

**8) குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 01/2019 மேல்முறையீட்டிற்கான காரணங்கள் –**

1. மனுதாரருக்கு தன்னை பராமரிக்க போதுமான வசதியும், தனது வாழ்க்கையை நடத்த உடல் தகுதியும் உள்ளது என்ற உண்மையைவிசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. மேலும் அப்பீல் மனுதாரர்களின் நிதி நிலைமை, வருமானம் மற்றும் நிதிப் பொறுப்புகளைவிசாரணை நீதிமன்றம் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். எந்தவொரு தகுந்த ஆதார ஆவணங்களும்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:13:14 +0530

இல்லாமல் அப்பீல் மனுதாரர்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது, எனவே சான்றுகள் இல்லாத காரணத்தினால் இந்த உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டியதாகும்.

2. எதிர்மனுதாரர் எம்.பி.ஏ. (M.B.A.) பட்டம் பெற்றவர் என்றும், அவர் தற்போது ஒரு அரசு நிறுவனத்தில் தொகுப்பூதியத்தில் வேலை பார்த்து அதிக பணம் சம்பாதிக்கிறார் என்ற உண்மையை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

3. குழந்தைக்கான கல்விச் செலவை தந்தை மட்டுமே ஏற்க வேண்டும் என்று விசாரணை நீதிமன்றம் தவறாகக் கருத்து தெரிவித்ததுடன், குழந்தைக்காக ஏற்படும் செலவுகளில் தாய்க்கும் சமமான பொறுப்பு உண்டு என்ற உண்மையை கவனிக்கத் தவறிவிட்டது.

4. திண்டுக்கல் குடும்ப நல நீதிமன்றத்தின் உத்தரவுப்படி எதிர்மனுதாரரின் மகளுக்கு மட்டும் ரூ.8,500/- பராமரிப்புத் தொகை கிடைத்துள்ளது என்று விசாரணை நீதிமன்றம் தவறாகக் கருதியுள்ளது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.3,000/- மற்றும் மகளுக்கு மாதம் ரூ.8,500/- என மொத்தம் ரூ.11,500/- பராமரிப்புத் தொகையாகப் பெறப்பட்டுள்ளது என்பதையும், 1-வது அப்பீல் மனுதாரர் அந்தத் தொகையைத் தனது சம்பளத்திலிருந்து எதிர்மனுதாரரின் வங்கிக் கணக்கில் தவறாமல் செலுத்தி வந்தார் என்பதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது.

5. அசல் மனுவின் மனுதாரரான ம.சா.1-ன் சாட்சியமே நம்பகத் தன்மையற்றதாக இருக்கும்போது, எந்தவொரு தகுந்த ஆதாரமும் இல்லாமல் சீதனப் பொருட்கள் மற்றும் நகைகள் 1-வது மேல்முறையீட்டாளரின் வசம் இருப்பதாக விசாரணை நீதிமன்றம் தவறான முடிவுக்கு வந்துள்ளது.

6. எதிர்மனுதாரருக்கு 1-வது அப்பீல் மனுதாரர் செலுத்திய தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரிய உயர்நீதிமன்றத்தின் உத்தரவை விசாரணை

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:13:23 +0530

நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது, மேலும் எதிர்மனுதாரர் 1–வது அப்பீல் மனுதாரருக்கு ரூ.97,000/– செலுத்தப் பொறுப்புடையவர் ஆவார்.

7. 1–வது மேல்முறையீட்டாளருடன் கூட்டுக்குடும்ப இல்லத்தில் (shared household) எதிர்மனுதாரர் வசிக்கும்போது மட்டுமே குடும்ப வன்முறை நிகழ முடியும், தனித்தனி இல்லத்தில் வசிக்கும் நபர் மீது நிகழ்த்தப்படும் வன்முறைக்கும், கூட்டுக்குடும்ப இல்லத்தில் வசிக்கும் நபர் மீது நிகழ்த்தப்படும் வன்முறைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டறிவது அவசியமாகும்.

8. பெண்களைக் குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் பிரிவு 18–ன் கீழ் பாதுகாப்பு உத்தரவு கோரிய கோரிக்கையை விசாரணை நீதிமன்றம் சரியாகவே நிராகரித்தது. ஆனால், அதற்கு மாறாக, அதே சட்டத்தின் பிரிவு 19–ன் கீழ் குடியிருப்பு உத்தரவை விசாரணை நீதிமன்றம் தவறாகப் பிறப்பித்துள்ளது.

9. எனவே, திண்டுக்கல் நீதித்துறை நடுவர் மன்றம் எண்–II–ல் டி.வி.ஓ.பி. எண். 19/2016 வழக்கில் 28.11.2018 தேதியிட்டுப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும்.

**9) இரண்டு குற்றவியல் மேல்முறையீடுகளிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பின்வருமாறு** :

1. மேல்முறையீட்டு எண் 55/2019ன் மனைவி/மேல்முறையீடுதாரர் வாழ்க்கை பொருளுதவி பெற தகுதிபடைத்தவரா ?

2. மேல்முறையீட்டு எண் 55/2019 ன் மனைவி/மேல்முறையீடுதாரரின் குழந்தைக்கு பள்ளி கட்டணம் செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமா ?

3. மேல்முறையீட்டு எண் 55/2019 ன் மனைவி/மேல்முறையீடுதாரருக்கு சீதனப் பொருட்களை திருப்பி கொடுக்க உத்தரவிடவேண்டுமா ?

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:13:32 +0530

4. மேல்முறையீட்டு எண் 55/2019 ன் மனைவி/மேல்முறையீடுதாரருக்கு அவர் குடியிருப்பு வீட்டிற்கு வாடகை தொகை செலுத்த உத்தரவிடவேண்டுமா ?

5. மேல்முறையீட்டு எண் 55/2019 ன் மனைவி/மேல்முறையீடுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறை காரணமாக நஷ்டஈட்டுத் தொகை வழங்க உத்தரவிடவேண்டுமா ?

6. மேல்முறையீட்டு எண் 1/2019 ன் கணவர்/மேல்முறையீடுதாரர் கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா ?

7. திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 D.V.O.P.No.19 of 2016 மனுவில் கடந்த 28.11.2018 தேதியிட்டு வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணையில் இம்மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலையீடு அவசியமானதா ?

**10)** வழக்கின் வசதி காரணமாக உபய தரப்பினர்கள் விசாரணை நீதிமன்ற வழக்கில் அழைக்கப்பட்டது போன்றே இவ்விரு குற்றவியல் மேல்முறை–யீட்டிலும் அழைக்கப்படுவர்.

**11) பிரச்சினை எண் –1 க்கான தீர்வு –**

மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் காதலித்து திருமணம் செய்துள்ளார்கள் என்பதும், திருமணத்திற்கு பின்னர் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தார்கள் என்பதும், திருமண காலத்தில் மனுதாரர் இந்து வகுப்பை சேர்ந்தவர் என்றும், அதன்பின்னர் அவர் கிறிஸ்தவராக மதமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதும், மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் இல்லற வாழ்வின் பயனாக 24.11.2004 ம் தேதி லஷ்யாடோனி என்ற பெண் குழந்தை பிறந்தது என்றும், அதன் பின்னர் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்பதும், அதன் தொடர்ச்சியாக பல காவல்நிலையத்தில் புகார்கள் கொடுக்கப்பட்டடது

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:13:42 +0530

என்பதும் மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்னர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக உள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் விவாகரத்து பரிகாரம் கோரி இந்து திருமண அசல் மனு எண்236/2008 வழக்கு தாக்கல் செய்தார் என்பதும், மேலும் திண்டுக்கல்,கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வாக்கு எண் −612/2008ம் தாக்கல் செய்தார் என்பதும், அதுசமயத்தில் மனுதாரர் தரப்பில் திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி மனுதாரர் வழக்கு தாக்கல் செய்தார் என்பதும் அந்த நீதிமன்ற நடவடிக்கையில் மனுதாரருக்கும் அவர்களுடைய குழந்தைக்கும், 1ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் வழங்க உத்தரவிட்டுள்ளது என்பதும், அதை 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார் என்பதும் இந்த மனுவின் சங்கதிகளில் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது.

**12)** விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆகவும் ஒரு தனிப்பட்ட சாட்சியை ம.சா.2 ஆகவும் விசாரணை செய்துகொண்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.34 ஆவணங்களையும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் எதுவும் முன்னிலைப்−படுத்தப்படவில்லை.

**13)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலும் அவருடைய சாட்சியத்திலும் மனுதாரருக்கு பொருளுதவி வழங்கி உத்தரவிடுவேண்டுமென்று பரிகாரம் கோரியுள்ளார். மனுதாரர் திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்த வழக்கிலும் மற்றும் கூடுதல் ஜீவனாம்சம் கோரி திண்டுக்கல், குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:13:50 +0530

மனுவிலும் ஜீவனாம்சம் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டு, ஏற்கனவே மனுதாரருக்கு வழங்கப்பட்ட பராமரிப்பு தொகை போதுமானது என்றும், கூடுதல் பராமரிப்பு தொகை தேவையில்லை என்று விசாரணை நீதிமன்றம் சரியான கோணத்தில் தீர்வு கண்டுள்ளது என்று இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் அவ்வாறே தீர்வு காண்கிறது.

**14) பிரச்சினை என் 2 க்கான தீர்வு**

மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் திருமண வாழ்க்கையின் பயனாக லஷ்சனாடோனி என்ற மகள் பிறந்து, மனுதாரர் மனு தாக்கல் செய்த காலத்தில் இருந்து முடியும் வரை பள்ளியில் படித்துவந்தார் என்பதும், தற்போது கல்லூரியில் படித்து வருகிறார் என்பதும் அவர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவில்லை என்றும், அவர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்கிறார் என்பதும் மனுதாரரின் பராமரிப்பில் உள்ளார் என்பதும் மறுக்கப்படாத சங்கதியாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையில், தந்தை என்ற அடிப்படையில் அவருடைய கல்வி செலவினங்களை 1ம் எதிர்மனுதாரர் ஏற்க கடமைப்பட்டவர் என்று கருதி விசாரணை நீதிமன்றம் கல்லூரி பருவ வாரியான கட்டணத்தை (Term Fees) செலுத்த உத்தரவிட்டுள்ளநிலையில், அந்த உத்தரவில் தலையீடு செய்ய இந்நீதிமன்றத்திற்கு போதுமான முகாந்திரம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**15) பிரச்சினை எண் 3 க்கான தீர்வு**

மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு அவருடைய குடும்பத்தில் இருந்து வழங்கப்பட்ட சீதனப் பொருட்களை திருப்பி கொடுக்கவேண்டுமென்றும், தங்க நகைகள் மற்றும் வீட்டு உபயோக பொருட்களை பொறுத்தும் உத்தரவிடவேண்டுமென்று குறிப்பாக பரிகாரம் கோரியுள்ளார். மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருககும் இடையே நடந்த திருமணம் காதல் திருமணமாக

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:00 +0530

இருக்கும் சூழ்நிலையில், வழக்கு விசாரணை காலத்தில் அவர்களுக்கு குழந்தை பிறந்த பின்னர் தன்னுடைய வீட்டில் இருந்து சீர்–சினத்தி செய்தார்கள் என்று மனுதாரர் குறிப்பாக வழங்கியுள்ள சாட்சியங்கள் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. மேலும் மேற்படி நகைகளை அடகு வைத்துள்ள சங்கதிகளும் ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், 1ம் எதிர்மனுதாரர்வசம் உள்ள சீதன பொருட்களை மனுதாரருக்கு திருப்பித்தர விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது சரியான அணுகுமுறையானது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி சங்கதிகளை மறுத்து வாய்மொழி சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தப்–படவில்லை.

**16)** எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது தங்கநகை வாங்கியதற்க்காக நகை கடையில் Estimate slip தான் கொடுக்கப்பட்டுளளது என்றும், அதை ரசீதாக கருதமுடியாது என்று வாதிட்டார். நகை கடையில் நகை வாங்கப்பட்டது குறித்து மனுதாரரின் சாட்சியம் இயற்கையாகவும் நம்பத்தகுந்ததாகவும் உள்ள நிலையில் நகை கடையில் ரசீதிற்குப் பதிலாக Estimate slip கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் மட்டுமே வைத்து நகை எதுவும் வாங்கவில்லை என்று தீர்மானிக்க இயலாது. எனவே சீதன பொருட்களை திருப்பி கொடுக்க–வேண்டுமென்று விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையீடு செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு எவ்விதமான முகாந்திரமும் இல்லை என்று கருதி அவ்வாறே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**17) பிரச்சினை எண் 4 க்கான தர்வு–**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலும் சாட்சியத்திலும் மனுதாரர் குடியிருந்து வரும் வாடகை வீட்டிற்கான வாடகையை 1ம் எதிர்மனுதாரர்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:09 +0530

செலுத்தவேண்டுமென்று உத்தரவிடக்கோரியுள்ளார். விசாரணை நீதிமன்ற–மானது மனுதாரரும் அவருடைய கணவரும் சேர்ந்து கட்டி அவர்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டில் இருந்துவரும்போது அவரை வெளியேற்றியதாக குறிப்பாக கட்சி செய்துள்ளார் என்றும், மேற்படி வீட்டில் தொடர்ந்து குடியிருந்து வருவதை எதிர்மனுதாரர்கள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாதென பாதுகாப்பு உத்தரவு வழங்கவேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**18)** மனுதாரர் தரப்பு வாதத்திற்கு ஆதரவாக கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது, 1ம் எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீட்டின் புகைப்படம் ம.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வீட்டின் மாடிப் பகுதியில் மனுதாரர் குடியிருக்க உத்தரவிடவேண்டுமென்றும், அந்த வீட்டில் மனுதாரர் குடியிருக்க தகுந்த பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்க–வேண்டுமென்றும் எடுத்துரைத்துள்ளார். மேற்படியான வாதுரையானது ஏற்கக்கூடியதாக இல்லை. மனுதாரரின் கணவரான 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்களுக்கு எதிராக பல ஆண்டுகளாக அதாவது 2010 முதல் தொடர்ந்து அவர்களுக்கு எதிராக காவல்நிலையம் மற்றும் நீதிமன்றங்களில் பல்வேறு வழக்குகளும், புகார்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளநிலையில், நீண்டகாலமாக ஆழமான விரோதம் இருக்கும் சூழ்நிலையிலும் அதே வீட்டின் மாடிப்பகுதியில் குடியிருக்க பாதுகாப்பு வழங்கி உத்தரவிடகோருவது மனுதாரரின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**19)** மேலும் ஏற்கனவே நீதிமன்ற நடவடிக்கைகளில் உணவு , உடை, இருப்பிடம் மருத்துவ செலவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஜீவனாம்சம் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், தனியாக வாடகை குடியிருப்புக்கு 1ம் எதிர்மனுதாரர் பணம் செலுத்த உத்தரவிடவேண்டுமென்று

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:18 +0530

கோருவது ஏற்கத்தக்கதாக இல்லை. மனுதாரர் தரப்பில் வங்கியின் சுவாதீன அறிவிப்பு மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வங்கியால் சொத்து சுவாதீனம் எடுக்கப்பட்டது என்று தீர்மானிக்க இயலாது. அதனடிப்படையில் மனுதாரர் மற்றும் அவரது கணவரான 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து கட்டியதாக கூறப்படும் வீட்டில் தொடர்ந்து பாதுகாப்பாக வசிக்க விசாரணை நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவானது சரியாக கோணத்தில் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**20) பிரச்சினை எண் –5 க்கான தீர்வு**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிலும் அவருடைய சாட்சியத்திலும் எதிர்மனுதாரர்கள் அனைவரும் மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறையில் ஈடுபட்டதாகவும் எனவே அதற்காக இழப்பீடாக தலா ரூ.10,00,000/– செலுத்த–வேண்டுமென்று பரிகாரம் கோரியுள்ளார். ஆனால் விசாரணை நீதின்றமானது இருதரப்பு வாதுரைக்குப் பின்னர் எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறையில் ஈடுபட்டதாக தீர்மானித்து ரூ.2,00,000/–ம் இழப்பீடாக வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது.

**21)** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது, மனுதாரர் கூறுவதுபோல் எதிர்மனுதாரர்கள் எந்த காலத்திலும் குடும்ப வன்முறையில் ஈடுபடவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரரை தவிர மற்ற எதிர்மனுதாரர்கள் தனித்தனியாக வெவ்வேறு முகவரியில் வசித்து வருகிறார்கள் என்றும், அவர்கள் 1ம் எதிர்மனுதாரரின் உறவினர்கள் என்ற அடிப்படையில் மட்டுமே வைத்து மனுதாரர் அவர்களை வழக்கில் சேர்த்து பரிகாரம் கோரியுள்ளார் எனவும், குறிப்பாக எந்த வகையான குடும்ப வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று மனுதாரர் தரப்பில்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:27 +0530

கூறப்படவில்லை என்று எடுத்துரைத்தார். மனுதாரர் தரப்பு ஆவணங்களை ம.சா.1ன் சாட்சியத்தையும் கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரர் தரப்பில் கூறுவதுபோல் பல்வேறு காலக்கட்டங்களில் மனுதாரருக்கு எதிராக 1ம் எதிர்மனுதாரர் பல சந்தர்ப்பங்களில் குடும்ப வன்முறையில் ஈடுபட்டுள்ளார் என்று தெளிவாக அறியமுடிகிறது. அதே சமயத்தில் மற்ற எதிர்மனுதாரர்களான அதாவது 1ம் எதிர்மனுதாரரின் தம்பியான 2ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரின் மனைவியான 3ம் எதிர்மனுதாரரும் 3ம் எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் தந்தையான 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்–களும், 1ம் எதிர்மனுதாரரின் சகோதரியும் அவரது கணவருமான 6, 7 எதிர்மனுதாரர்களும், 1ம் எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் தந்தையுமான 8, 9 எதிர்மனுதாரர்களுக்கும் எதிராக கூறப்பட்ட சங்கதிகளை கருத்தில்–கொள்ளும்போது, 1ம் எதிர்மனுதாரரைத் தவிர மற்ற எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர் பொதுவான பல குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார் என்று அறியமுடிகிறது. 1ம் எதிர்மனுதாரரைத் தவிர, மற்ற எதிர்மனுதாரர்கள் மனுதாரரை எந்த காலக்கட்டத்தில், எந்த சூழ்நிலையில், எந்த மாதிரியான குடும்ப வன்முறையில் ஈடுபட்டார்கள் என்பதற்கோ, அவர்கள் செயல்களானது குடும்ப வன்முறை என்ற வரையறைக்குள்வரும் என்பதற்கோ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் மனுதாரர் தரப்பில் குறிப்பான மற்றும் தெளிவான சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 2 முதல் 9 வரையான எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருடன் உள்ள உறவுமுறையினை கருத்தில்கொண்டு பார்க்கும்–போது, அவர்கள் வெவ்வேறு காலக்கட்டத்தில்தான் 1ம் எதிர்னுதாரரின் குடும்பத்திற்குள் வந்துள்ளார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி என்பதும், அவர்கள் ஒரே முகவரியில் வசிக்கவில்லை என்பதும் தெளிவாக அறியமுடிகின்றது. எனவே, பொதுவான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 2 முதல் 9 வரையான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நஷ்ட ஈடு வழங்க

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:36 +0530

விசாரணை நீதிமன்றம் அளித்த உத்தரவில் தலையீடு செய்வதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

22) அதே நேரத்தில் மனுதாரர் தரப்பில், விசாரணை நீதிமன்றம் வழங்கிய ரூ.2,00,000/– இழப்பீட்டை அதிகப்படுத்தி வழங்கி உத்தரவிடவேண்டுமென்று கோருவது ஏற்கத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேற்படி சங்கதிகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது மனுதாரருக்கு வழங்கவேண்டிய இழப்பீட்டு பரிகாரத்தை பொறுத்து, 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மட்டும் ரூ.2,00,000/–ம் இழப்பீடு வழங்க உத்தரவிடுவதுதான் சரியானதும் மற்றும் நியாயமானதுமாக இருக்கும் என்றும், அந்த அடிப்படையில் மட்டுமே விசாரணை நீதிமன்ற உத்தரவை மாற்றி அமைக்கவேண்டியதாக உள்ளது என்று இந்த பிரச்சினைக்கு அவ்வாறே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**23) பிரச்சினை எண் –6 க்கான தீர்வு–**

பிரச்சினை எண் 5ஐ பொறுத்து மட்டும் இம்மேல்முறையீட்டு நீதிமன்றம் மாற்றியமைத்து தீர்வுகண்டுள்ள நிலையில் இம்மேல்முறையீடானது பகுதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது என இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் அவ்வாறே தீர்வு காண்கிறது.

**24) பிரச்சினை எண் –7க்கான தீர்வு –**

மேற்கண்ட பிரச்சினைகளில் 1 முதல் 4க்கு விசாரணை நீதிமன்றமான திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 D.V.O.P.No.19 of 2016 மனுவில் கடந்த 28.11.2018ல் பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணையை உறுதிபடுத்தி, பிரச்சினை எண் 5ஐ பொறுத்து மட்டும் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணையில் இம்மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலையீடு அவசியமானது என்றும்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:45 +0530

அதுபொறுத்து மட்டும் இம்மேல்முறையீடு பகுதியாக மாற்றியமைக்கப்பட்டு இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் அவ்வாறே தீர்வு காண்கிறது.

**இறுதியில், குற்றவியல் மேல்முறையீட்டு எண்– 1/2019** பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 2 முதல் 7 மற்றும் 9 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விசாரணை நீதிமன்றம், D.V.O.P.No.19 of 2016 மனுவில் கடந்த 28.11.2018 தேதியிட்டு வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணையானது இழப்பீட்டு பரிகாரத்தை பொறுத்து மட்டும் மாற்றி அமைக்கப்பட்டு, 1ம் எதிர்மனுதாரர் மட்டும் மனுதாருக்கு ரூ.2,00,000/– இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்று தீர்மானித்து, இதர பரிகாரங்களைப் பொறுத்து விசாரணை நீதிமன்ற உத்தரவு மற்றும் உத்தரவாணையை உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவுத்தொகை இல்லை.

**இறுதியில், குற்றவியல் மேல்முறையீட்டு எண்–55/2019** தள்ளுபடி செய்யப்பட்டு, திண்டுக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, D.V.O.P.No.19 of 2016 மனுவில் கடந்த 28.11.2018 தேதியிட்டு வழங்கிய உத்தரவு மற்றும் உத்தரவாணை உறுதிசெய்யப்பட்டுள்ளது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:14:54 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திண்டுக்கல்.**

<u>**கூடுதல் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்–**</u>

–இரண்டு மேல்முறையீட்டு வழக்குகளிலும் மற்றும் இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தவில்லை–

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.28 17:15:03 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
**கு. மே. வ.எண்கள்–1/ 2019**
**மற்றும் 55/2019**
நாள்–28.08.2026
அசல்/நகல் பொதுவான தீர்ப்புரை